மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 1

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**நவம்பர் 2010**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2010 நவம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## நான் உன்னோடேகூட இருப்பேன்.

நியாயாதிபதிகள் 6 : 16.



தேவனுடைய நாம மகிமைக்காக பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில் **TVGM ஆராதனை & சமூகக் கூடாரம்** 22.09.2010 அன்று ***Dr. Chuang Ping Derg*** **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்களாலும் 16.10.2010 அன்று **பாஸ்டர் விக்கி** குழுவினராலும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**நன்றி : பாஸ்டர் ஜோசப் ஜெபமணி & பாஸ்டர் விக்கி**

**இயேசுகிறிஸ்துவே கர்த்தர்!**

எழுதியிருக்கிறபடி **கிறிஸ்து பாடுபடவும்,** மூன்றாம் நாளில் **மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்** வேண்டியதாயிருந்தது;
அன்றியும் **மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும்** எருசலேம் தொடங்கிச் **சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே** பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. **இவைகளுக்கு நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்கள். லூக். 24 : 46 – 48.**



# TVGM ஸ்தாபகரிடமிருந்து . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

“100 – கிராம ஊழியம்” மாதாந்திர பத்திரிகையை நீங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வாசித்து ஜெபித்து, தாங்கி வருகிறதற்காக என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுக்கே மகிமை!

என்னுடைய உள்ளத்தில் அடிக்கடி தொனிக்கிற ஒரு வேதவசனம் **இவைகளுக்கு நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்கள். லூக்கா 24 : 48.**

100 – கிராம ஊழியத்தில் இணைந்து செயல்படுபவர்களும், புதிதாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் **மனந்திரும்பி,** பாவமன்னிப்பை பெற்றுக்கொண்ட அனுபவ சாட்சிகளை நான் கேட்கும்போது தேவாதி தேவனைத் துதிக்கிறேன்.

இவர்களுடைய சாட்சியை நான் மட்டுமல்ல, அநேக மக்கள் கேட்க வேண்டும் என்பது என் உள்ளத்தின் வாஞ்சையாக உள்ளது. ஆதலால் முதல் கட்டமாக அவர்களுடைய சாட்சியை சி.டி.யில் பதிவு செய்து கொடுத்து, அவர்கள் மூலம் அநேகர் அவர்களது சாட்சியை கேட்க வைத்தல் ஆகும்.

தெரிந்தெடுக்கப்பட்ட சாட்சிகளை டி.வி. மூலமாக சகல தேசத்தாரும் அறிவதற்கு பிரயாசப்படுதல் ஆகும்.

இதுவே **என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது.**

கர்த்தர் கொடுத்த TVGM தரிசனத்தின் வேலைகள் அநேகம் எங்களை நெருக்கிக் கொண்டிருந்தாலும், மேலும் எங்களுக்கு நேரமில்லாதிருந்தாலும் **“இவைகளுக்கு நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்கள்”** என்ற தரிசனத்தை ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்ற பாரம் என்னை நெருக்கிக் கொண்டேயிருக்கிறது.

இந்த தரிசனத்தை நிறைவேற்ற தங்களை கர்த்தருக்கு அர்ப்பணித்த வீடியோ கேமிரா மேன், எடிட்டர்கள் மற்றும் ஒவ்வொருடைய சாட்சியை கேட்டு, சத்தியத்தை சுருக்கமாக சாட்சியாக அறிவிக்க பயிற்சி கொடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை எழுப்ப ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**100 – கிராமம்,** கிறிஸ்துவுக்குள்,
10.10.2010 **P.T. கிறிஸ்டோபர்.**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER Letter Dated:10.10.10**



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!

**"நான் உன்னோடேகூட இருப்பேன்"** என்று வாக்குக்கொடுத்த இயேசுகிறிஸ்துவின் விலையேறப் பெற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

2010 செப்டம்பர் மாதத்தில் TVGM மூலம் அறுவடை செய்யப்பட்ட ஆத்துமாக்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

கர்த்தருடைய கிருபையினால் செப்டம்பர் 21ம் தேதி சில போதகர்களுக்கு மாத்திரம் சிறப்பு கூடுகை ஒன்று நடைபெற்றது. அந்த கூடுகை போதகர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

செப்டம்பர் 22ம் தேதி திருச்சி - பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில் கட்டப்பட்ட TVGM ஆராதனை & சமூகக்கூடாரம் **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** மற்றும் ***Dr. Chuang Ping Derg*** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவன் தமது ஆவியையும், ஆசீர்வாதத்தையும், போதகர் மீதும் சபை மக்கள் மீதும் பொழிய ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம் - இராதாபுரம்** யூனியனின் 27.09.2010 முதல் 01.10.2010 வரை"100-கிராம ஊழியம்" ஆசீர்வாதமாக நடைபெற்றது.

அக்டோபர் 1 , 2 , 3 ஆகிய தேதிகளில் கோடாவிளையில் கலிலேயா முகாம் நடைபெற்றது. 100-கிராம ஊழியர்கள் தங்கள் சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள். இந்த முகாமின் மூலம் சுமார் 200 பேர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை!

தொடந்து TVGM மூலம் நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஆதரிக்கவும் மறவாதீர்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

# நான் உன்னோடேகூட இருப்பேன்.

நியாயாதிபதிகள் 6 : 16

வாக்குத்தத்த செய்தி

**சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

இந்த மாதத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே!

கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்: **நியாயாதிபதிகள் 6 :16 நான் உன்னோடேகூட இருப்பேன்.**

தேவன் கிதியோனுக்கு கொடுக்கும் வார்த்தை **"நான் உன்னோடேகூட இருப்பேன்"** . கிதியோனின் வாழ்க்கை சரித்திரத்தை நியா. 6 – 8 அதிகாரங்களில் வாசிக்கும்போது, அவர் மூலமாக தேவன் இஸ்ரவேலரை மறுபடியும் மீட்டுக் கொள்கிறார் என்பது வியப்படைய செய்கிறது. ஏனென்றால் தேவன் கிதியோனை அழைத்தபோது நியா.6:15ல் "ஆ ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்" என்று சொல்கிறான். ஆனால் கர்த்தர் கிதியோனை நோக்கி **"நான் உன்னோடேகூட இருப்பேன்; ஒரு மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய்"** என்று சொல்கிறார்.

அது மாத்திரமல்ல, கிதியோனுக்கு தேவதூதன் தோன்றி கூறியபோது, அது கர்த்தருடைய தூதன்தான் என்பதை தான் செலுத்தின பலியினாலே உறுதிப் படுத்திக் கொள்கிறான். இதை நியா. 6: 21 – 22ல் வாசிக்கலாம். "அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோ வென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார். அப்பொழுது கிதியோன், அவர் கர்த்தருடைய தூதன் என்று கண்டு . . .".

அதற்கு பின்பு அவன் எவ்வாறு விக்கிரகங்களை அழித்துப் போட்டு கர்த்தருக்கு பலிகளை செலுத்தினான் என்பதை நாம் பார்க்கிறோம். இப்படியாக மீதியானியரால் இஸ்ரவேலர் அடிமைப்படுத்தப்பட்டதற்கான மூலக்காரணத்தை முறித்துப் போட்டான்.

மேலும் இஸ்ரவேலரை மீட்கும் அந்த பெரிய பணிக்கு தேவன் தன்னை தான் நியமித்தார் என்பதை உறுதி செய்ய ஒரு அடையாளத்தைக் ( மயிருள்ள தோலின் அடையாளம் ) கேட்கிறான் என்பதை நியா.6: 36–40 வாசிக்கலாம்.

அந்தப் பணியை ஆரம்பித்த போது 32,000 பேர் கிதியோனின் படையில் இருந்தார்கள். தேவன் தான் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டார் என்பதற்கு அடையாளமாக 300 பேரை மட்டுமே தேவன் தேர்ந்தெடுத்தார். அவ்வாறே தேவன் பெரிய மீதியானியரின் கூட்டத்தை வெல்ல 300 மக்களை மட்டுமே உபயோகிக்கிறார்.

கிதியோனுடைய வெற்றியை நாம் வாசிக்கும்போது, தேவனின் கரம் அவன் மேலிருந்ததையும், தேவன் அவனோடிருந்

ததையும் பார்க்கலாம். நம் தேவன் நம்மோடிருக்கையில் எதுவும் நமக்கு கடினமானது அல்ல.

கிதியோன் சிலைகளை அழித்தபோது இஸ்ரவேலர்கள் அவனை கொல்ல விரும்பியதைப் போல அநேக நேரங்களில் தேவசித்தத்தை நீங்கள் செய்யும்போது மக்கள் உங்களுக்கு எதிராக வரலாம். தேவன் செய்ய விரும்பியதை கிதியோனின் மூலம் நிறைவேற்றியது போல உங்கள் வாழ்விலும் அவர் சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறார்.

அநேக சமயங்களில் நம்முடைய பலவீனங்களால் தேவனை நம்புவது கடினமாகி விடுகிறது. நீங்கள் கிதியோனைப் போல உங்கள் குடும்பத்தில் சிறியவனாக இருக்கலாம். கிதியோனின் வாழ்க்கையில் நாம் காண்பதுபோல, கர்த்தர் உங்கள் பலவீனங்களை தமது பலமாக காண்கிறார். மனிதர்களின் பார்வையில் கர்த்தர் உங்களை உயர்த்தி, நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் வெற்றியைத் தருவார்.

அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! தேவன் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உங்களோடிருந்து, உங்களை தாங்குவார். ஒருவேளை நீங்கள் கடினமான பாதை வழியாக சென்று கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் உங்களோடு இருக்கிறார். அவர் உங்களை பார்த்துக் கொள்வார் என்பதை மறவாதீர்கள். தேவன் உங்களோடு இருக்கும்போது, எந்த சூழ்நிலையை குறித்தும் கவலை வேண்டாம். அவர் உங்கள் வாழ்வில் எல்லாவற்றிலும் சிறந்ததை செய்வார்.

நீங்கள் ஒரு வேலைக்காக விண்ணப்பித்துக் கொண்டிருக்கலாம், வேலை மாற்றத்திற்காக காத்துக் கொண்டிருக்கலாம், குழந்தை பாக்கியத் திற்காக காத்துக் கொண்டிருக்கலாம், உங்கள் சொத்து விற்பனைக்காக காத்துக் கொண்டிருக்கலாம் அல்லது உங்கள் பிள்ளைகளின் திருமணத் திற்காக காத்துக் கொண்டிருக்கலாம். நீங்கள் இப்பொழுது எந்த சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தர் உங்களோடு இருப்பார்.

நாம் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது தேவன் மோசேயுடனும், ஆபிரகாமுடனும், ஈசாக்கோடும் இருந்தார் என வாசிக்கிறோம். அதுபோல தேவன் உங்களோடு இருக்க விரும்பு கிறார். ஆனால் நீங்கள் எப்படியாக தேவன் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்ய அனுமதிக்கிறீர்கள்? நீங்கள் தேவன் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்ய இடம் கொடுக்க வேண்டும்.

மேலும் நீங்கள் அவருடைய வழிகளில் நடந்து, அவருடைய பார்வைக்கு நியாயமானதை செய்து, அவரது கற்பனைகளையும் பிரமாணங் களையும், கைக்கொள்ளும்போது தேவன் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உங்களோடு இருப்பார். தேவன் உங்களோடு இருக்கும்போது, நீங்கள் எதைக் குறித்தும் பயப்பட வேண்டாம். தாவீது இதை சங்.118 : 6 ல் “கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?” என்று கூறுகிறார்.

மேலும் உங்கள் பயங்களை தேவன் ஆட்கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டும். நீங்கள் அவரை நேசித்து முழுமையாக நம்ப வேண்டும். அப்படி

செய்யும்பொழுது, அவர் உங்கள் வாழ்வில் மிகச் சிறப்பானதை செய்வார். தேவன் ஒரு வழியை அடைக்கும்போது, வேறொரு வழியை திறக்கிறார். அவருடைய வழிகள் மேன்மையானவைகள். அவருடைய நினைவுகள் உங்கள் நினைவுகளைவிட ஞானமானவைகள். ஆகவே எந்த காரியத்திலும், எந்த சூழ்நிலையிலும் தேவன் எப்போதும் உங்களோடிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பயப்படாதீர்கள்!

தேவன் உங்களை அதிகமாக நேசிக்கிறார். எனவே அவர் உங்களை விட்டு விலகி செல்ல மாட்டார். நீங்கள் இருக்கும் வண்ணமாகவே அவர் உங்களை ஏற்றுக்கொள்ள சித்தமுள்ள வராயிருக்கிறார்.கஷ்டமான சூழ்நிலை யிலும் அவர் உங்களை புறக்கணிக்க மாட்டார். நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் ஜெபிக்கவும், அவரை நம்பவும் வேண்டும். ஏனெனில் எபி. 13: 5–6 "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக் கிறாரே. அதினாலே நாம் தைரியங் கொண்டு: கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே." என்று வாசிக்கிறோம்.

**தேவன் உங்களோடு இருப்பதற்கு நீங்கள் மூன்று காரியங்கள் செய்ய வேண்டும்.**

***1. கர்த்தருக்கு சேவை செய்து, அவருடைய கற்பனைகளை கைக் கொள்ளவேண்டும்.***

***2. கர்த்தரை முழு இருதயத்தோடே எல்லா காலத்திலும் தேட வேண்டும்.***

***3. வருங்கால சந்ததிக்கு தேவ பயத்தை கற்றுக் கொடுக்க வேண்டும்***

**முதலாவது :** நமது தேவனாகிய கர்த்தரை மாத்திரமே நாம் சேவிக்க வேண்டும். இது நமது கர்த்தர் நமக்கு கொடுத்த முதலாவது கற்பனை. இஸ்ரவேலர் பலமுறை உண்மையான தேவனை விட்டு விலகி செல்வதை காண்கிறோம். பலமுறை தேவன் எச்சரித்த பின்பும் இஸ்ரவேலர் உண்மையான தெய்வத்தை மறந்து அந்நிய தேவர்களை வணங்கினார்கள். இதன் காரணமாக தோல்வியடைந் தார்கள். இஸ்ரவேலர் ஏழு முறை இதே பாவத்தை செய்ததை நியாயாதிபதி களில் மாத்திரம் வாசிக்கிறோம்.

**இரண்டாவது:** எல்லா காலத்திலும் கர்த்தரை நாம் தேடுவது அவசியமாயி ருக்கிறது. ஆனால் நாம் பல சமயங்களில் பிரச்சனைகளை சந்திக்கும் போது மட்டுமே தேவனைத் தேடுகிறோம். கஷ்டமில்லாத நேரங்களில் அவரை மறந்து விடுகிறோம். ஆனால் இரகசியம் என்னவென்றால் நாம் அவரை எல்லா காலங்களிலும் தேடும் போது அவர் நம்மை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். ஆகையால் கர்த்தரை மட்டுமே முழு இருதயத்தோடே எல்லா காலத்திலும் தேட வேண்டும்.

**மூன்றாவது,** நாம் தேவபயத்தை நம் பிள்ளைகளுக்கும், வருங்கால சந்ததிக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். இஸ்ரவேலரின் சரித்திரத்தை நாம் சந்ததி சந்ததியாக வாசிக்கும்போது, பல மேடுபள்ளங்களைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட காலக் கட்டத்திலும் தேவன் தமக்கு பயந்த ஒரு மனிதனை கொண்டு, இஸ்ரவேலரை நடத்துகிறார். அதைப் போலவே நாமும் தேவபயத்தை நம் பிள்ளைகளுக்கும், வருங்கால சந்திக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்படியாக இந்த காரியங்களை செய்யும்போது தேவன் எல்லா நேரங்களிலும் உங்களோடு இருப்பார். அவருடைய கிருபை உங்களை சூழ்ந்துகொள்ளும். அவருடைய சமுகம் உங்களுக்கு முன்பாகச் செல்லும். அவருடைய கரம் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உங்களோடே இருக்கும். மனிதன் உங்களுக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாது. மேலும் உங்கள் இளைய சந்ததிக்கு இவைகளை கற்பிக்கும் போது, அவர்களுடைய சந்ததி இன்னும் அதிகமாக ஆசீர்வதிக்கப்படும்.

**பக்தன் பாடுகிறார் :**

***நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை***
***நான் உன்னை என்றும் கைவிடுவதுமில்லை***
***நான் உன்னை காண்கின்ற தேவன்***
***கண்மனிப் போல் உன்னைக் காப்பேன்.***

ஆம், அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

இந்தப் பாடலை பாடிக்கொண்டே உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

***என் தேவன் எப்போதும் என்னோடு இருக்கிறார்,***
***நான் பயப்பட மாட்டேன். அவர் என்னை கைவிடமாட்டார்.***

**தேவனுக்கே மகிமை!**

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2010 செப்டம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் செப்டம்பர் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் உதவி செய்தார்.

என்னுடைய சரீர பெலவீனங்களை மாற்றி, என்னுடைய பொறுப்புகளையெல்லாம் நிறைவேற்றி முடிக்கவும், முன்புபோலவே அதிக தூரம் நடந்து சென்று ஊழியம் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார்.

ஊழியத்தின் எல்லைகள் விரிவாகவும், புதிய தொடர்புகள் கிடைக்கவும் முயற்சி செய்து ஜெபித்து வருகிறோம்.

**தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**

செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

### TVGM தலைமை அலுவலக தேவைகள்!

1. கம்பியூட்டர் மற்றும் ஆங்கிலம், தமிழ் டைப் தெரிந்தவர்கள் தேவை.
2. அலுவலக வேலைகளில் உதவி செய்யவும், அம்பாசிட்டர் கார் ஓட்டவும், லைசன்ஸ் உள்ள அனுபவமுள்ளவர் தேவை .

# திருநெல்வேலி - இராதாபுரம் யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

## நாள்: 27.09.2010 – 01.10.2010



கர்த்தருடைய பெரிதான கிருபையால் திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரம் யூனியனில் 27.09.2010 திங்கள் முதல் 01.10.2010 வெள்ளி வரை **"100 கிராம ஊழியம்"** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு இவைகளை இராதாபுரம் **A.G. சபை பாஸ்டர் A.ரமேஷ்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். சுவிசேஷப் புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை TVGM பொறுப்பெடுத்துக் கொண்டது. இந்த ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெறுவதற்கு **A.G.** மண்டல தலைமை போதகர் **Rev.S. பாக்கியநான்** அவர்கள் ஆலோசனைகள் கூறி ஜெபித்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 44 கிராம ஊழியர்கள் வந்து 5 நாட்கள் கிராமங்களில் தங்கி ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் இராதாபுரம் யூனியனிலுள்ள எல்லா கிராமங்களின் பெயர்களையும் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் **பாஸ்டர் ரமேஷ்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். TVGM ஸ்தாபகர் சகோ. **P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் ஊழியர்களை ஜெபத்தில் நடத்தி, ஆலாசனைகள் கூறி உற்சாகப்படுத்தினார்கள். ஊழியர்களை 10 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். **A.G.** சபையின் சார்பில் மதிய விருந்து வழங்கப்பட்டது. பின்பு 10 குழுவினரும் கிராமங்களுக்குள் கடந்து சென்றார்கள்.



இவர்கள் போய் கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவை அறிவித்தார்கள். இந்த ஊழியத்தின் போது 10,256 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 5000 **இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்,** 1000 சிலுவைக்கொடிகள் கிராமங்களில் இலவசமாக கொடுத்து தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தி வந்தார்கள்.

கடைசி நாள் ஊழியங்களை முடித்து மீண்டும் முன்புகூடிய இடத்திலேயே கிராம ஊழியர்கள் கூடி ஜெபித்து, கிராமங்களில் கர்த்தர் தங்களை எப்படியாக



நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் **சகோ. P.T.கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர், சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர், சகோதரி பெர்சிஸ் ஸ்டீபன் மற்றும் சகோதரி லிடியா** ( லண்டன் ) ஆகியோர் கலந்துகொண்டார்கள். TVGM சார்பில் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப் படியும், A.G. சபையின் சார்பில் உணவும், இனிப்பும் வழங்கப்பட்டது. பின்பு ஊழியர்கள் சந்தோஷத்துடன் **கலிலேயா முகாமில்** கலந்து கொள்ள புறப்பட்டு சென்றார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோதரி லீதியாள், சகோதரி மேரிசெல்லாபாய் சகோதரி கனி, சகோதரி தேவகிருபை.**

நாங்கள் 14 கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். எல்லோரும் வாஞ்சையுடன் வாங்கினார்கள். சில வீடுகளில் எங்களிடம் ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். மொத்தம் 1172 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோ. பால்ராஜ், சகோ. அந்தோணி, சகோ. தாஹாகனி, சகோ. சூசைமாணிக்கம், சகோ. தாவீது தங்கவேல்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் பெற்றுக்கொண்டார்கள். **கடம்பன்குளம்** கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க கூடாது என்று தடை செய்தார்கள். மீறி கொடுத்தால் அடிப்போம் என்று எச்சரித்தார்கள். எனவே எங்களது சுவிசேஷ பைகளை ஓரிடத்தில் வைத்துவிட்டு கிராமத்திற்குள் ஜெபநடை செய்து வர மட்டும் வாய்ப்பு கிடைத்தது. இதற்கு முன்னால் இக்கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தவர்களுக்கு அடி கிடைத்ததாகக் கூறினார்கள். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோ. மாற்கு மாரியப்பன், சகோ. மகாராஜன், சகோ. நோவா, சகோ. பாபுசாலமோன்.**

**வடக்கன்குளம்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவே கர்த்தர் என்று அறிவித்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு, சத்தியத்தைக் கேட்டார்கள். **மாணிக்கம்புதூர்** கிராமத்தில் ஒரு வாலிபன் நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகம்,கைப்பிரதி, சிலுவைக்கொடியை வாங்கி மழைத் தண்ணீரில் தூக்கி வீசி எறிந்தான். வேறு ஒரு சகோதரனிடம் சத்தியத்தை சொன்னபோது, அவன் எங்களை தகாத வார்த்தைகளைக் கொண்டு திட்டி விரட்டினான். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி அந்தோணிமேரி, சகோதரி கஸ்தூரி, சகோதரி ஷீலா, சகோதரி அமிர்தம்,சகோதரி மரியாள்.**

**இடிந்தகரை** கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது, இரண்டு வாலிப பெண்கள் வாஞ்சையோடு கேட்டு,

அவர்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். மற்றும் ஒரு பெண் எங்களை மதமாற்றம் செய்ய வந்திருக்கிறீர்களா ? என்றார். ஒருவரிடம் உங்கள் விலாசம் கொடுங்கள், புத்தகம் அனுப்புகிறோம் என்று கேட்டதற்கு அவர் உங்களை அடித்துப் போடுவேன், ஓடுங்கள் என்று விரட்டினார். அடித்தாலும் பரவாயில்லை என்று சொல்லிவிட்டு போனோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி ரூத் கலா,**
**சகோதரி ரெபேக்கா,**
**சகோதரி மணியம்மாள்,**
**சகோதரி அன்னாள்.**

நாங்கள் 6 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து, இயேசுவே ஆண்டவர் என்று அறிவித்தோம். நான்கு பெண்கள் எங்களை ஏன் இங்கு வந்தீர்கள் ? யார் உங்களை அனுப்பியது ? உடனே போய் விடுங்கள் என்று வாக்குவாதம் பண்ணி னார்கள். **குட்டம்** கிராமத்தில் ஒருவரிடம் சத்தியத்தை சொன்னபோது, அவர் நான் யார் என்று தெரியுமா ? நான் ஒரு தீவிர வாதி, நான் பல பேரை சாகடித்திருக் கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக் கும்போதே நாங்கள் அவருக்கு சுவிசேஷ வசனங்களை சொன்னோம். அதைக் கேட்டு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம் பெற்றுக் கொண்டார். மொத்தம் 1251 சுவிசேஷப் புத்தகங்கள், 1200 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி மரியம்மாள்,**
**சகோதரி கிரேஸ்பத்மா,**
**சகோதரி லூர்துமேரி,**
**சகோதரி அபியேல்**

நாங்கள் கர்த்தருடைய கிருபையினால் 15 கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தோம். **கடக்குளம்** கிராமத்தில் குழந்தையில்லாதவர்கள் பலருக்கு ஜெபிக் கும்படி சொன்னதால் அவர்களுக்கு குழந்தைபாக்கியம் கிடைக்க ஜெபித்தோம். **முதுமொத்தன் மொழி** கிராமத்தில் சுவிசேஷம் சொல்லவே முடியாது. ஆனால் கர்த்தர் எங்களுக்கு திறந்த வாசலை தந்தபடியால் தைரியமாக சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோ. செல்வராஜ்,**
**சகோ. ஆரோன், சகோ. பீட்டர்,**
**சகோ. ஜெபமலைநாதன்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாங்கிக் கொண்டார்கள். ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பலர் எங்களிடம் ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோதரி எஸ்தர் சாலமோன்,**
**சகோதரி பிச்சையம்மாள்,**
**சகோதரி அன்னக்கிளி, சகோதரி**
**கிருபா பழனியம்மாள்.**

உறுமன்குளம் ஊராட்சியை சேர்ந்த கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். எங்களுக்கு ஊழியத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. மொத்தம் 1058 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோதரி எஸ்தர் கனகாம்புஜம்,**
**சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி,**
**சகோதரி செல்லக்கனி,**
**சகோதரி லூயிஸ் அம்மாள்.**

நவலடி ஊராட்சியிலுள்ள கிராமங் களில் ஊழியம் செய்தோம்.ஒரு தெருவில்

நுழைந்தவுடனே ஒருவர் இங்கு திரு விழா நடைபெறுகிறது. நீங்கள் இங்கே போகக் கூடாது. மீறி போய் உங்கள் கிறிஸ்தவ புத்தகங்களை கொடுத்தால் அவைகளையெல்லாம் தீ வைத்து கொளுத்தி விடுவோம் என்று சொல்லி எங்களை துரத்தி விட்டார்கள். நாங்கள் வேறு கிராமங்களில் ஊழியம் செய்த போது மக்கள் ஆர்வமாக சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டனர். மொத்தம் 850 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோ. யோசுவா,**

**சகோ.முரளிதரன்,**

**சகோ.அன்பு சாலமோன்,**

**சகோதரி எஸ்தர்பேபி,**

**சகோதரி சலோமி சம்மனசு.**

நாங்கள் செம்பாடு, நம்பிபத்து கிராமங்களில் சத்தியத்தை கூறும்போது அநேகர் வாஞ்சையோடு புத்தகங்களைப் பெற்றுக்கொண்டார்கள். தேவையுள்ள வர்கள் ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்தோம். காமராஜபுரத்தில் ஒருவன் எங்கள் குழுவில் இருந்த சகோதரியை மிகவும் அற்பமாகப் பேசி ஒரு பெண்ணாக இருப்பதால் உங்களை விடுகிறேன். ஒரு ஆணாக இருந்தால் நடப்பதே வேறு என்று மிரட்டி துரத்தி விட்டான். மொத்தம் 1125 சுவிசேஷப் புத்தகங்கள், 1100 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

## 2010 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை




கர்த்தருடைய கிருபையினால் கரூர் – தோகமலை யூனியனில் 11.09.2010 அன்று இயேசுவை விரும்புவோர் முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சகோ.பால்சடையன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

அங்குள்ள ஆதரவற்ற விடுதியில் தங்கியிருந்த 21 சிறுவர், சிறுமியர் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர். இவர்களுக்கு நல்லொழுக்க கதைகள், இயேசு தன் ஊழிய நாட்களில் செய்த அற்புதங்களை விளக்கி சொன்ன போது, சந்தோ ஷத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். இவர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை!**

## உண்டியல் மற்றும் காணிக்கைகளை சேகரித்து அனுப்ப ஒவ்வொரு ஊரிலும் தரிசனம் பெற்றவர்கள் தேவை!

TVGM மூலம் உண்டியல்களை பெற்று, கிராம ஊழியத்திற்கு காணிக்கை சேகரித்து தர அநேகர் வாஞ்சையுடன் காணப்படுகிறார்கள்.

இவர்களை மாதத்திற்கு ஒரு முறை நேரடியாக சந்தித்து ஜெபித்து, அவர்கள் உண்டியலில் சேர்த்து வைத்திருக்கும் காணிக்கைகளை எடுத்து TVGM தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க தரிசனம் பெற்றவர்கள் தேவை.

வேலை நேரம் தவிர மாலை நேரங்களில் ஒரு சில வீடுகளையாவது சந்தித்து, ஜெபித்து கௌரவ ஊழியம் செய்ய ஆட்கள் தேவை!

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# சிவகங்கை மாவட்டம் - சாக்கோட்டை யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2010 நவம்பர் 15** திங்கள் காலை 9 மணி முதல் **நவம்பர் 19** வெள்ளி இரவு 10 மணி முடிய **சாக்கோட்டை யூனியனிலுள்ள கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2010 நவம்பர் 15** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2010 நவம்பர் 19** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2010 நவம்பர் 15 -19 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**கெர்மோன் சர்ச்,**

**9, சர்ச் தெரு, அசோக் நகர் - மேற்கு**

**காரைக்குடி போஸ்ட்**

**சிவகங்கை மாவட்டம்.**

**செல்: 99438 18875, 94423 18518**

உதவி செய்ய முன் வந்த எல்லா போதகர்களுக்கும் நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

# ஒரு தலைவனாக கிதியோன்!

கிதியோனின் வாழ்க்கையை வாசிக்கும்போது, பல தலைமைத்துவ பாடங்களை கற்றுக் கொள்ளலாம். இஸ்ரவேலரை ஆண்ட 15 நியாயாதிபதிகளில் கிதியோன் ஐந்தாவது நியாயாதிபதி. மற்ற நியாயாதிபதிகளுடன் ஒப்பிடும்போது அவன் தான் மிகச் சிறந்த நியாயாதிபதி. தேவன் ஒரு சாதாரண மனிதனை அசாதாரணமாக மாற்றினார் என்று வாசிக்கிறோம். கிதியோன் ஒரு சாதாரண விவசாயி. இஸ்ரவேலரை விடுவிக்க வேண்டுமென்ற பேராவல் அவனுக்கு இருந்ததில்லை. ஆனால் தேவன் அவன் தான் இஸ்ரவேலரை விடுவிக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருந்தார். கிதியோன் தேவனை மாத்திரம் நம்பினதினாலே, தேவன் அவனை விசுவாசமுள்ளவனாக கண்டார்.

**கிதியோனிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள கூடிய சில தலைமைத்துவக் குணங்கள் : –**

***1. அவன் தேவனுக்கு மிகவும் கீழ்படிந்தான்***
***2. அவன் துணிவும் தைரியமும் உள்ளவனாக இருந்தான்***
***3. அவன் ஞானமுள்ளவனாக இருந்தான்***
***4. அவன் விசுவாசமுள்ளவனாக இருந்தான்***
***5. அவன் எச்சரிக்கையுள்ளவனாக இருந்தான்***
***6. அவன் மிகவும் ஒழுக்கமுடையவனாக இருந்தான்***
***7. அவன் தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்தியவனாக இருந்தான்***

**முதலாவதாக : –** கிதியோன் தேவனுக்கு மிகவும் கீழ்படிதல் உள்ளவனாக இருந்தான். தேவன் இஸ்ரவேலரை மீட்கும் பணியை கொடுத்தபோது, கிதியோன் அதை ஏற்றுக் கொண்டு அதற்கு கீழ்படிகிறான். தேவன் எதிர்பார்த்த விதமாக அதை செய்தான். அவன் தேவன் கொடுத்த ஒவ்வொரு வேலையிலும் கீழ்படிந்தான். நியா.6:27ல் **"அப்பொழுது கிதியோன் தன் வேலையாட்களில் பத்துபேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தான்"** என்று வாசிக்கிறோம்.

**இரண்டாவதாக : –** கிதியோனுக்கு விக்கிரகங்களை உடைப்பதற்கான துணிவு இருந்தது. விக்கிரகங்கள் இருந்த அதே இடத்தில் கர்த்தருக்குப் பலிகளை செலுத்தினான். இதற்கு அதிகமான துணிவும், தைரியமும் தேவைப்பட்டது. அதே சமயத்தில் கர்த்தர் அவனுக்கு அளித்த வேலையை ஞானத்தோடு செய்து முடித்தான். மேலும் தேவதூதன் அவனை **"பராக்கிரமசாலியே"** என்று அழைக்கிறார். இதை நியா.6:12ல் **"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்** " என்று வாசிக்கிறோம்.

**மூன்றாவதாக : –** கிதியோன் ஒரு ஞானமுள்ள மனிதன். விக்கிரகங்களை உடைப்பதற்கு தனது ஞானத்தை உபயோகிக்கிறான். எல்லா மனிதர்களைப் போல அவனுக்கும் பயமிருந்தாலும் தன் பணியை ஞானத்தோடு செயல்படுத்துகிறான். அவன் இரவிலே ஒருவரும் இல்லாத போது நிறைவேற்றுகிறான். இதை அவன் முதலாம் கட்டளைக்கு விரோதமானது என செய்கின்றான். இதை நாம் நியா.6:27ல்

"**அவன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைப் பகலிலே செய்யாமல், இரவிலே செய்தான்**" என்று வாசிக்கிறோம்.

***நான்காவதாக :*** – கிதியோன் ஒரு விசுவாசமுள்ள மனிதன். அவன் ஒருபோதும் மனிதர்களை நாடவில்லை. எல்லாவற்றிலும் தேவனை விசுவாசத்தோடு நோக்கி பார்க்கிறான். மீதியானியரின் எண்ணிக்கை மிகப் பெரியதாக இருந்தாலும், கர்த்தரை விசுவாசித்து அவர் கட்டளையிட்ட எண்ணிக்கையையே மீதியானியருடன் போர் செய்ய தேர்ந்தெடுத்தான். ஒரு வேளை அவனை சூழ்ந்திருந்த மக்கள், அவன் முந்நூறு பேருடன் மட்டும் செல்வது முட்டாள் தனம் என கூறியிருக்கலாம். ஆனால் தேவன் மேலுள்ள விசுவாசத்தில் அவர்களை அழைத்து செல்கிறான். இதை நியா.7:4 ல் "**கர்த்தர் கிதியோனை நோக்கி: ஜனங்கள் இன்னும் அதிகம், அவர்களைத் தண்ணீர்களண்டைக்கு இறங்கிப் போகப்பண்ணு; அங்கே அவர்களைப் பரிட்சித்துக் காட்டுவேன்; உன்னோடே கூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வரக்கடவன்; உன்னோடே கூட வரலாகாது என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வராதிருக்கக்கடவன் என்றார்**" என வாசிக்கிறோம்.

***ஐந்தாவதாக :*** – கிதியோன் ஒரு எச்சரிக்கையுள்ள மனிதன். அவன் செய்த காரியத்தில் எல்லாம் மிகவும் எச்சரிக்கை உள்ளவனாக இருந்தான். தேவன் தான் தன்னை நடத்துகிறார் என்பதை அவன் தேவனிடத்தில் ஒரு அடையாளத்தை **( மயிருள்ள தோல் )** கேட்பதின் மூலம் உறுதி செய்து கொள்கிறான். இதை நியா. 6:37ல் "**மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறன்; பனி தோலின் மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன்** " என்று வாசிக்கிறோம்.

***ஆறாவதாக :*** – கிதியோன் தான் செய்வதிலெல்லாம் ஒரு ஒழுங்கை கடை பிடிக்கிறான். தேவன் விரும்பிய மக்களை தேர்ந்தெடுத்து, அவர்களை பயிற்றுவிக் கிறான். மேலும் அவர்களை மூன்றாக பிரித்து மீதியானியர் இருந்த இடத்தை சுற்றி வைத்தான் என்று வாசிக்கிறோம். அவன் ஒவ்வொரு காரியத்தையும் சரியாகவும் நுட்பமாகவும் செய்கிறான். இதை நியா 7:16ல் "**அந்த முந்நூறு பேரை மூன்று படையாக வகுத்து, அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்து**" என வாசிக்கிறோம்.

***கடைசியாக :*** – கிதியோன் கர்த்தரை மகிமைப்படுத்தின மனிதன். இஸ்ரவேலர் அவனை தங்கள் இராஜாவாகவும், அவன் மகன் அதற்குப் பின் ஆளவும் விரும்பினார்கள். ஆனால் எல்லா மகிமையையும் தேவனுக்கே செலுத்துகின்றான். இதை நியா.8:23ல் "**அதற்குக் கிதியோன்: நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான்** " என வாசிக்கிறோம்.

இன்று கர்த்தர் நம் மத்தியில் கிதியோன்களை தேடுகிறார். விசுவாசத்தில் பெரிய காரியங்களை செய்யக்கூடிய மக்களை நம் மத்தியில் தேடுகிறார்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

## கடிதம் எழுதிய பிள்ளைகள் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதங்கள் இதோ . . .

**சகோதரி கேத்ரின், கன்னியாகுமரி.**

நான் B.Ed. தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 75% மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார்

**சகோ. சேகர், திருவண்ணாமலை.**

நான் M.Phil படிக்க இடம் கிடைக்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டு இடம் கிடைக்க செய்தார்.

**சகோதரி கண்ணம்மாள், கோவை.**

என் மகளுடைய திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நல்லதொரு இல்வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

**சகோ.சாமுவேல், கோவை.**

தங்களுடைய ஜெபத்தைக் கேட்டு மகள் சுசிலாவுக்கு கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக ஸ்தோத்திரம். மகளுடைய கணவரின் கால்களில் இருந்த புண்களையும் கர்த்தர் குணமாக்கினார்.

**2010 நவம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : பெரம்பலூர்
யூனியன் : வேப்பந்தட்டை
நாள் : 27.11.2010
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் S. பர்னபாஸ்**
**நித்திய ஜீவ ஒளி ஜெபவீடு**
**மின் நகர், அரியலூர் ரோடு**
**பெரம்பலூர் - 621 212.**
செல்: 93626 42456
99432 81640

**2010 நவம்பர் மாத வாக்குத்தத்தக் கூட்டம்**

**நான் உன்னோடேகூட இருப்பேன். நியா. 6 : 16.**

**நாள் : 01.11.2010** திங்கள்

**துதி ஆராதனை :** 6PM - 7PM

**வாக்குத்தத்த செய்தி:** 7PM-8PM

**இடம்:**

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**சோமரசம்பேட்டை.**
**திருச்சி – 620 102.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்: "இயேசுவுக்கு சாட்சிகள்"** என்ற தலைப்பில் 100–கிராம ஊழியர் களின் சாட்சிகள் சி.டி. மூலமாகவும், தெரிந்தெடுக்கப்பட்ட சாட்சிகள் டி.வி. மூலம் சகல தேசத்தாருக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** 100–கிராம ஊழியம் மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே நடந்து வருகிறது. இது மாதத்தில் இரண்டு முறை நடைபெறுவதற்கு கர்த்தர் புதிது புதிதாக தன்னார்வத் தொண்டர் களையும், வழிநடத்துவதற்கு தரிசனம் பெற்ற உதவி தலைவர்களையும், பொருளாதாரத்தில் தாங்கக் கூடிய தேவ மனுஷர்களையும் கர்த்தர் கிருபையாக எழுப்ப ஜெபியுங்கள்.

**புதன் :** தலைமை அலுவலகத்தில் பின்தொடர்பணி செய்யவும், இயேசுவை விரும்புவோர் முகாம் நடத்தவும் தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை அலுவலக சேவைக்கு கர்த்தரே கிருபையாக கொண்டுவர ஜெபியுங்கள்.

**வியாழன் :** TVGM சீஷத்துவப் பயிற்சி நிலையம் ஒழுங்காக செயல் படவும், தலைமை தாங்கி நடத்த தரிசனம் பெற்றவர்களை கர்த்தரே கொண்டுவரவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி :** TVGM மூலம் முழுநேர கிராம ஊழியர்களுக்கு வேதாகம பயிற்சியளித்து, கிராமங்களுக்கு அனுப்பப்படவும், ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டப்படவும், ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தங்கள் தகுதிகளுக்கு ஏற்ப கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டித் தர தாங்க ளாகவே முன்வர ஜெபியுங்கள்.

**சனி :** TVGM சிறுவர் இல்லத்தில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு கல்வியறிவு மற்றும் தாலந்துகள் வளர, ஆவிக்குரிய பயிற்சிகள் கொடுக்க தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் தானாக முன்வர ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TASOL தரிசனமானது படிப்படியாக நிறைவேற்றப்பட தரிசனம் பெற்ற பிள்ளைகள் இணைந்து செயல் பட ஜெபியுங்கள்.

ஆரம்ப கட்டமாக TASOL நிலத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை கர்த்தருக்கு சித்தமான வர்கள் மூலம் ஏற்ற நேரத்தில் செலுத்தப்பட ஜெபியுங்கள்.

100–கிராம ஊழிய பத்திரிகையை வாசித்து ஜெபிக்கிற மக்களை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

## TVGM தலைமை அலுவலக முகவரி

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


BRO.STEPHEN CHRISTOPHER
MANAGING TRUSTEE.

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
Email : 100village@tvgm.org
Bro.Stephen CELL : 94871 92763
Founder : Bro .P.T. Christopher
CELL : 94435 44628


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
**'100 கிராம ஊழியம்'** அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( சிறுவர் இல்லம் ) 80G வரிவிலக்கு உண்டு
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

---

( அல்லது ) சகல ஊழியங்களுக்கும்
MR. STEPHEN CHRISTOPHER,
SB A/c No:12491010 18538 CANARA BANK, Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**

**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

**POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011**

**Posting Date 25th at H.P.O. Trichy.**

TVGM **ஆராதனைக் கூடாரம்**



***Dr. Chuang Ping Derg &***
பாஸ்டர் ஜோசப் ஜெபமணி



22.09.2010 அன்று பஞ்சப்பூர் பிரதிஷ்டை ஆராதனையில் பங்கேற்றவர்கள்.




விக்டோரியா ஆசிரியை சாட்சியளித்தல்.



மெதடிஸ்ட் உயர்நிலைப்பள்ளி நாட்டுநலப்பணி திட்ட மாணவிகள்

**To**

**Return Requested:**
TVGM , Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.